## பிழைத்தலுக்கான வழிகாட்டி:

# இணையவழி பாலினம் சார்ந்த வன்முறையிலிருந்து தங்களுடைய இணையச் சூழ்வெளிகளைத் தற்காத்துக்கொள்வது எப்படி




sflc.in unesco

Guide to Survive- How to Defend Your Online Spaces Against Online Gender Based Violence, 2024
By SFLC.in in partnership with UNESCO

© Copyright 2024 SFLC.in Licensed under Creative Commons BY SA NC 4.0

Published by: SFLC.in
K9, 2nd Floor, Birbal Road, Jangpura Extension, New Delhi – 14, India.

Email: mail@sflc.in

Website: https://www.sflc.in

X: @SFLCin

# இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறை என்பது என்ன?

ஒருசில நபர்களை, தாம் குறிப்பிட்ட ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற காரணத்தால், அவர்களைக் குறிவைத்து, அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் செயல்கள், இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறை (Online Gender Based Violence) எனப்படுகிறது. இதனை எளிமையாக OGBV என்று குறிப்பிடலாம்.

## OGBV-இன் தன்மைகள்

- இணையவழியில் நிகழும்
- ஒருவருடைய பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படும்
- தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டது

- உளவியல் சார்ந்ததாகவும், ஒருவருடைய நற்பெயருக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும், உடல்சார்ந்ததாகவும் இருக்கக்கூடும் (எடுத்துக்காட்டு: துன்புறுத்துதல்)
- பண இழப்பினையும் பொருளாதாரப் பாதிப்பினையும் ஏற்படுத்தக்கூடும் (எடுத்துக்காட்டு: இணையவழிப் பண பறிப்பு, உடைமை இழப்பு)
- சமூகத்தில் ஒருவரைத் தனிமைப்படுத்தும் தன்மை கொண்டதாக இருக்ககூடும் (எடுத்துக்காட்டு: அவதூறு செய்தல்)

### பொது வரையறைகள்

சட்டப்பூர்வமாக ஒரு வன்செயலை வரையறுக்கும்போது ஒருசில பொதுவான சொற்களைக் காணமுடியும். அவற்றை உங்கள் பார்வைக்கு எளிமைப்படுத்திப் பின்வருமாறு அளிக்கிறோம்:

- **நயமற்ற தன்மை/ஆபாசத் தன்மை (obscene)**: தற்போது நிலவிவரும் அறம்/ஒழுக்கமுறைக்கு எதிராகவும், மிகவும் தரம் தாழ்ந்ததாகவும் இருக்கக்கூடியது, பொதுமக்கள் ஏற்கத் தகாததாகக் கருதுவது.
- **வெளிப்படையான பாலியல் குறியீடுகள்/பாலியல்ரீதியில் வெளிப்படையான குறியீடுகள் (sexually explicit)** : நிர்வாணக் காட்சிகளும், உண்மையான அல்லது சித்தரிக்கப்பட்ட பாலியல்ரீதியான செயற்பாடுகள்.

### இந்தக் கையேடு எதுபற்றியது? இது எனக்கு எந்தவகையில் தேவைப்படும்?

பின்வரும் விஷயங்களைப் பற்றிய புரிதலை அளிக்க உதவும் வகையில் இந்தக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. OGBV என்றால் என்ன
2. இதை நீங்கள் சந்தித்துள்ளீர்களா/சந்தித்துவருகிறீர்களா
3. இப்படி குற்றம் இழைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சட்டப்படி உள்ள வழிகள் என்ன

### இந்தக் கையேட்டின் உள்ளடக்கம்

**பகுதி 1:**

இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறை குறித்து பகுதி 1 விளக்குகிறது.

**பகுதி 2:**

இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறைக்கு நீங்கள் ஆளாகியிருந்தால், உங்களுக்கான சட்டப்பூர்வ ஆதரவுக்கான முறைகளைப் பற்றி விளக்குகிறது பகுதி 2.

# பகுதி 1 இணையவழி பாலினம் சார்ந்த வன்முறை: ஆய்வுப் பட்டியல்

ஒருவர் தாம் இணையவழி பாலினம் சார்ந்த வன்முறைக்கு ஆளாகியிருக்கிறாரா என்பதை அடையாளம் காண்பதற்கு ஒரு கருவியாகவும், அத்தகைய வன்முறைக்குத் தகுந்த சட்டப்பூர்வப் பின்விளைவுகளைப் பற்றிய தகவல்களை நாடுவோருக்கும் இந்தப் பட்டியல் உதவுகிறது.

## 1. இணையவழிப் பாலியல் துன்புறுத்தல்

நேரிடையாகவும், உடல்ரீதியாகவும் நிகழும் பாலியல் துன்புறுத்தலின் தொடர்ச்சியாக நிகழ்வது இது

A பாலியல் தன்மையுடைய விமர்சனங்கள்/குறிப்புரைகளை ஒருவர் தங்களிடம் தெரிவிக்கிறார்களா?

B பாலியல்ரீதியான கைம்மாறுகளை/ பிரதிபலன்களைத் தங்களிடம் கோருகிறார்களா?

C பாலுணர்வுக்காட்சியுள்ள பதிவுகளைக் காணச்சொல்லித் தங்களைக் கட்டாயப்படுத்துகிறாரா?

D தொடர்ச்சியாக இந்த நோக்கத்தோடு தங்களை அணுகுகிறார்களா?

மேற்கண்ட நான்கில் ஏதேனும் உண்மை என்றால், அதுவும் இணையவழியாக நிகழ்வதாகவும், தங்களுடைய ஒப்புதல் இல்லாமல் நிகழ்வதாகவும் இருந்தால், இவ்வாறான நடத்தை இணையவழி பாலியல் துன்புறுத்தலாகிறது.

**BNS, பிரிவு 75**

பாலியல் தொல்லை: அதிகபட்சம் 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும்/ அல்லது அபராதம்.
பாலியல் சம்பந்தமான கருத்துருக்கள்: 1 ஆண்டு சிறை தண்டனை மற்றும்/அல்லது அபராதம்.

எவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்: மேற்கூறிய ஏதேனும் வழிகளில் தவறாக இணைய வழியில் பெண்களை அணுகும் ஆண்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.






## 2. இணையவழி ஆபாசக்காட்சி

A ஆபாசமான, பாலியல் ரீதியில் வெளிப்படையான பதிவுகளை உங்களுக்கு ஒருவர் அனுப்புகிறாரா?

B இதில் அவர்களுடைய தனிப்பட்ட அந்தரங்கப் படங்களோ, அல்லது பாலுணர்வுக் காட்சிகளோ (pornographic material) உள்ளனவா?

C தங்களுடைய அனுமதியின்றி அவர் இதனைச் செய்து வருகிறார்களா?

மேற்கொண்ட அனைத்தும் உண்மை என்றால், இது இணையவழி ஆபாசக்காட்சி காண்பித்தலாகக் கூடும்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 67**

முதல்முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 3 ஆண்டுகள் சிறை + 5 லட்ச ரூபாய் வரை அபராதத்தொகை.

தொடர்ந்து குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறை + 5 லட்ச ரூபாய் வரை அபராதத்தொகை.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 67A**

முதல்முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரை அபராதத்தொகை

தொடர்ந்து குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 7 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரை அபராதத்தொகை.

இந்த வகை செயலுக்கு ஆளாகும் அனைவருக்கும் இச்சட்டப்பிரிவுகள் பொருந்தும்.

## 3. இணையவழி வேண்டாப் பின்தொடர்தல்

A இணையவழியே தங்களுடன் உரையாட தொடர்ந்து யாராவது முயற்சித்து வருகிறார்களா?

B தங்களுக்கு இதில் விருப்பமில்லை என்பதைத் தெளிவாக எடுத்துரைத்த பிறகும் இது தொடர்கிறதா?

C தங்களுடைய செயல்பாடுகளை அவர்கள் கண்காணித்து வருகிறார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? அதாவது, நீங்கள் இணைப்பில் இருப்பதைப் பார்த்து உங்களை அணுகுதல், தாங்கள் எத்தனை முறை ஒரு செயலியைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைக் கணக்கில் வைத்துக்கொள்ளுதல் முதலியன.

D ஒரு குற்றச்செயலைத் தவிர்க்கும் பொருட்டு இது செய்யப்படுவதாக உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா? அவ்வாறு பின்தொடர்பவர், தன் கடமையை மேற்கொள்வதற்காக இப்படி செய்வதாகத் தெரிவிக்கிறார்களா? (உதாரணமாக, ஒரு வழக்கிற்காக இரகசியப் பணியிலிருக்கும் காவல் அதிகாரி) இத்தகைய செயலுக்கு நியாயமான விளக்கம் ஏதேனும் அளிக்கப்பட்டதா?

E மேற்கண்ட இரண்டு குறிப்புகளைப் பொருத்தவரை, அதிகாரிகளாகத் தங்களைச் சொல்லிக்கொள்பவர்களிடம் உரிய அடையாள அட்டை எதையாவது கேட்டுப் பார்த்திருக்கிறீர்களா? (இது கட்டாயமில்லை என்றாலும், தம்மை காவல்துறை அதிகாரி என்று அவர்கள் சொல்லிக் கொள்வது உண்மையா என்பதை உறுதிசெய்துகொள்ள இதைச் செய்யலாம்)

மேற்கண்டவற்றில் a, b, மற்றும் c ஆகியவை உண்மை என்றால், இது இணையவழி வேண்டாப் பின்தொடர்தலாக இருக்கக்கூடும். கடைசியாகக் குறிப்பிட்டது உண்மையானால், மேற்கண்ட செயற்பாடுகளுக்குச் சட்டப்பூர்வமாக நியாயம் உள்ளபடியால், அவற்றை இணையவழி வேண்டாப் பின்தொடர்தலாகக் கருத இயலாது போகலாம்.

**BNS, பிரிவு 78 (1) (ii)**

முதல் தடவை குற்றம்: 3 ஆண்டு சிறைதண்டனை + அபராதம்.

மீண்டும் குற்றம் செய்தால்: 5 ஆண்டு சிறைதண்டனை + அபராதம்.

எவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்: இணணையம் மூலமாக தொடர்ச்சியாக பின் தொடர்ந்து பெண்களை தொந்தரவுக்கு உட்படுத்ட்தும் ஆண்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

## 4. ஒப்புதலின்றி தங்களுடைய தனிப்பட்ட/அந்தரங்கப் படங்களையும் காணொலிகளையும் பகிர்தல்

A தங்களுடைய தனிப்பட்ட/அந்தரங்கப் படங்களையும் காணொலிகளையும் இணையத்தில் பகிர்கிறார்களா?

B இதற்கு நீங்கள் ஒப்புதல் தெரிவிக்கவில்லையா?

C கூடுதல் குறிப்பு (கட்டாயமாக இருக்கவேண்டியதல்ல): இதைத் தங்களுடைய காதலரோ, அல்லது முன்னாள் காதலரோ செய்கிறாரா?

மேற்கண்டவற்றில் a மற்றும் b ஆகியவை உண்மை என்றால், இது ஒப்புதலின்றி தங்களுடைய தனிப்பட்ட/அந்தரங்கப் படங்களையும் காணொலிகளையும் பகிரும் செயலாகக்கூடும்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, 66E**

3 ஆண்டுகள் சிறை + 2 லட்ச ரூபாய வரையிலான அபராதத்தொகை


**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 67A**

முதல் முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை

தொடர் குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 7 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை

மேற்கண்ட சட்டங்கள் பொதுப்படையாகவே பொருந்தக்கூடியவை. ஒருவேளை தங்களின் காதலர்/காதல் இணையர் இதனைச் செய்தார் என்றால், இது பழிவாங்கும் ஆபாசச் செயலாக (revenge porn) இருக்கலாம். இது ஒரு குறிப்பிட்ட வகையிலான நெருங்கிய இணையர் இழைக்கும் வன்முறை ஆகும். இத்தகைய சூழ்நிலைகளில் இதற்கான பழியைத் தாங்களே சுமப்பதாகக் எண்ணிவிடக் கூடாது என்பதை நினைவில் கொள்வது முக்கியமாகும். தங்களின் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடமோ உறவினர்களிடமோ உதவியை நாடுங்கள்.

இச்செயல்களுக்கு ஆளாகும் அனைவருக்கும் இச்சட்டப்பிரிவுகள் பொருந்தும்.



## 5. தனிவிவரங்கள் வெளியிடல்

A தங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் இருப்பதைக் காண்கிறீர்களா? பொதுவில் நீங்கள் பகிர்ந்திடாத, மற்றவர்கள் பார்வைக்கு வரக்கூடாதவை என்று நீங்கள் எண்ணும் படங்கள், காணொலிகள், உரையாடல்கள் முதலியனவோ, தங்களுடைய முகவரி, ஆதார் எண், தங்களுடைய உடல்நிலை சார்ந்த தகவல்கள் முதலிய தனிப்பட்ட தகவல்களோ இணையத்தில் இருப்பதைக் காண்கிறீர்களா?

B தங்களுக்குத் தெரியாமலும், தங்கள் ஒப்புதல் இல்லாமலும் இவை பகிரப்பட்டுள்ளனவா?

C இந்தத் தகவல்கள் தங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றனவா? தாங்கள் இதன்பேரில் துன்புறுத்தலுக்கும், கொடுமைக்கும்/மிரட்டல்களுக்கும் ஆளாகியுள்ளீர்களா?

மேற்கண்டவை உண்மை என்றால், இது தனிவிவரங்களை வெளியிடும் செயலாகக்கூடும்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 67A**

முதல் முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை

தொடர் குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 7 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 66E**

3 ஆண்டுகள் சிறை + 2 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை

**BNS, பிரிவு 356 (1 & 2)**

2 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும்/அல்லது அபராதம் / இரண்டும் / சமூக சேவை உடன்

எவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்:மேற்கூறியவற்றை அனுபவிக்கும் அனைவருக்கும்.

## 6. உருவம் திரித்துச் சித்தரித்தல்

A தாங்கள் இணையத்தில் பதிவுசெய்த படங்களை, வேறு படங்களோடு திரித்து இணைத்து பதியப்பட்டுள்ளதைக் காண்கிறீர்களா? வேறொருவருடைய காணொலியோடு தங்களுடைய முகத்தை இணைத்து, அந்த நபரைத் தங்களைப் போல காட்ட முயற்சிப்பதாகத் தெரிகிறதா?

B இது உங்களுக்குத் தெரியாமலும், தங்களுடைய ஒப்புதல் இல்லாமலும் செய்யப்பட்டதா?

C இந்தப் பதிவு ஆபாசத் தன்மை கொண்டதாகவும், அந்தரங்க மறைவில்லாததாகவும் உள்ளதா?

D இவை, நுண் திரிபு (deep fake)/ செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட பாலியல்ரீதியில் வெளிப்படையான பதிவுகளாக இருக்கின்றனவா?

மேற்கண்டவற்றில் a முதல் c வரையிலானவை உண்மையென்றால், இது இணையத்தில் உருவம் திரித்துச் சித்தரிக்கும் செயலாகக்கூடும்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 66E**

3 ஆண்டுகள் சிறை + 2 லட்ச ரூபாய் வரையிலான அபராதத் தொகை.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 67A**

முதல் முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராதத்தொகை.

தொடர் குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 7 ஆண்டுகள் சிறை + 10 லட்ச ரூபாய் வரை அபராதத்தொகை.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 66D**

3 വർഷം തടവും 1 ലക്ഷം രൂപവരെ പിഴയും.

இச்செயல்களுக்கு ஆளாகும் அனைவருக்கும் இச்சட்டப்பிரிவுகள் பொருந்தும்.

## 7. பார்வை மோகம்

A தாங்கள் அறியாத நேரத்தில் தங்களின் படங்களோ, காணொலிகளோ, வேறெந்த வகையிலான பதிவுகளோ பதிவுசெய்யப்பட்டுள்ளனவா?

B தாங்கள் தனியுரிமையை எதிரிபார்த்திருந்த ஒர் அந்தரங்க சமயத்தை அப்பதிவு உள்ளடக்கியுள்ளதா?

C படத்தை/காணொலியைப் பதிவுசெய்வதற்குத் தங்களுடைய அனுமதி இருந்தாலும், இணையத்தில் தங்களுடைய ஒப்புதல் இல்லாமல் பகிரப்பட்டதா?

மேற்கண்டவை அனைத்தும் உண்மையென்றால், இது பார்வை மோகச் செயலாகக்கூடும்.

**BNS, பிரிவு 77**

முதல் முறை குற்றம்: 1 வருடம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை + அபராதம்.
மீண்டும் குற்றம் செய்யும் போது: 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை + அபராதம்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 67**

முதல்முறை குற்றச்செயல்: 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை + 5 லட்ச ரூபாய் வரை அபராத விதிப்பு.

தொடர் குற்றச்செயல்: 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை + 10 லட்ச ரூபாய் வரை அபராத விதிப்பு.

எவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்:ஆண்களால் மேற்கூறியவற்றை அனுபவிக்கும் பெண்கள் அனைவருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

## 8. இணையவழி பாலியல்ரீதியான சுரண்டல் + பாலியல்ரீதியான மிரட்டல்

A தங்கள் விருப்பத்தை மீறி யாராவது தங்களை ஆடைகளைக் களைய வைக்கிறார்களா? அப்படி செய்யாவிட்டால் ஊறு ஏற்படும் என்றோ, தங்களுக்குத் தீங்கு நேரக்கூடும் என்றோ, அவர்களுக்கு வேண்டியதைச் செய்யாவிட்டால் தங்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றோ தோன்றுகிறதா?

B அந்த நபர் இச்செயல்களை இணையம் வழியாகச் செய்து, அத்தகைய செயல்களில் தங்களை ஈடுபடுத்த கட்டயப்படுத்தியுள்ளாரா?

C பாலியல் கைம்மாறுகளைச் செய்யச்சொல்லியும், இன்னும் பல அந்தரங்க படங்களையும் காணொலிகளையும் பகிரச்சொல்லியும் தங்களை மிரட்டுகிறாரா? அவர்கள் சொன்னவாறு செய்யாவிட்டால் தங்களுடைய தனிப்பட்ட விவரங்களையும், படங்களையும் காணொலிகளையும் இணையத்தில் பகிர்ந்து புழங்கவிடப்போவதாக உங்களை மிரட்டுகிறாரா?

மேற்கண்டவை உண்மையென்றால், இச்செயல் பாலியல்ரீதியான சுரண்டலாகவும் பாலியல்ரீதியான மிரட்டலாகவும் கூடும்.

**BNS, பிரிவு 74**

1-5 ஆண்டுகள் சிறை + அபராதம்

**BNS, பிரிவு 351 (2)**

மிரட்டல்: 2 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்

**BNS, பிரிவு 351 (3)**

மரண அச்சுறுத்தல்: 7 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்

**BNS, பிரிவு 351 (4)**

அடையாளம் தெரியாத மிரட்டல்: 2 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, 66E**

3 ஆண்டுகள் சிறைத்தண்டனை + 2 லட்ச ரூபாய் வரை அபராத விதிப்பு.



எவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும்: மேற்கூறியற்றை அனுபவிக்கும் அனவருக்கும் இது பொருந்தும், ஆனால் பிரிவு 354 பெண்களுக்கு பொருந்தும்.

## 9. பாலின அடிப்படையிலான வெறுப்புப் பேச்சு

A வன்மைமிக்க, புண்படுத்தும் ரீதியிலான அல்லது பாகுபடுத்தும் நோக்கிலான இணையப் பதிவுகள் தங்களைக் குறிவைத்துப் பதிவேற்றப்பட்டுள்ளனவா? இப்பதிவுகளில் பாலின அடிப்படையிலான வசைச்சொற்களும் அடங்கியுள்ளனவா? தாங்கள் குறிப்பிட்ட ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர் என்பதாலே உங்களுக்கு அத்தகைய செய்திகளை அனுப்புகிறார்கள் என்று தோன்றுகிறதா?

B தங்களுக்கும், தங்களுடைய நற்பெயருக்கும், தங்களுடைய உடைமைக்கும், தங்களோடு சேர்ந்தவர்களுக்கும் தீங்கு விளைவிப்பதாகவோ, தீங்கு விளைவிக்கக்கூடியதாகவோ தங்களுக்குத் தோன்றுகிறதா?

C இப்பதிவுகள் தங்களுக்குக் கொடுங்காயத்தையோ அல்லது மரணத்தையோ கூட ஏற்படுத்தப்போவதாக மிரட்டல் செய்திகளைக் கொண்டுள்ளனவா?

மேற்கண்டவற்றில் a மற்றும் b ஆகியவை உண்மை என்றால், இது பாலின அடிப்படையிலான வெறுப்புப் பேச்சாகக் கூடும்.

**BNS, பிரிவு 356**

2 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும்/அல்லது அபராதம்.

**BNS, பிரிவு 351 (2)**

மிரட்டல்: 2 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்

**BNS, பிரிவு 351 (3)**

மரண மிரட்டல்: 7 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்

**BNS, பிரிவு 351 (4)**

அடையாளம் தெரியாத மிரட்டல்: 2 ஆண்டுகள்/அபராதம்/இரண்டும்.

**BNS, பிரிவு 79**

3 ஆண்டுகள் சிறைத்தண்டனை + அபராதம்.

யார் மீது இச்சட்டம் பயன்படுத்தப்படும்: மேற்கூறியவற்றை அனுபவிக்கும் அனைவருக்கும் பொருந்தும், ஆனால் பிரிவு 509 மட்டும் குறிப்பாக பெண்களுக்கே பொருந்தும்.



## 10. அடையாளத் திருட்டு

A தங்களைப் போல காட்டிக்கொள்ளும்/ நடிக்கும் பொருட்டு, தங்களுடைய கடவுச்சொல்லையோ, மின்னணுக் கையொப்பத்தையோ, அல்லது மற்ற தனிப்பட்ட தகவல்களையோ வேறொருவர் பயன்படுத்துகிறாரா?


B ஏமாற்றுச் செயல்களில் ஈடுபடும் பொருட்டு, ஏதேனும் தொடர்புகளையோ, விண்ணப்பங்களையோ, அறிக்கைகளையோ மேற்கொண்டிருக்கிறார்களா? உதாரணமாக, தங்களுடைய பெயரில் கடன்கள் வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறதா?

மேற்கண்டவற்றில் எது நடந்திருந்தாலும், இது அடையாளத்தைத் திருடும் செயலாகக் கூடும்.

**தகவல் தொழில்நுட்பச் சட்ட, 2000, பிரிவு 66C**

3 ஆண்டுகள் வரை சிறைக்காவல், 1 லட்ச ரூபாய் வரையிலான அபராத விதிப்பு

இச்செயல்களால் பாதிப்பிற்குள்ளான அனைவருக்கும் இச்சட்டப்பிரிவு பொருந்தும்.




## 11. சிறார்களைக் குறிவைத்த குற்றச் செயல்கள்

A இணையத்தில் செய்திகளோ, படங்களோ, வேறுவகை பதிவுகளோ உருவாக்கப்படுகின்றனவா?

B செய்திகள்/படங்கள்/பிறவகை பதிவுகள் சேகரிக்கப்படுகின்றனவா?

C இப்பதிவுகள், ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட சிறார்களைப் பற்றியதாக உள்ளனவா?

D ஆபாசத் தன்மையில்/பாலியல் ரீதியாக வெளிப்படையான வகையில் அவர்கள் சித்தரிக்கப்படுகிறார்களா?

மேற்கண்டவை அனைத்தும் உண்மையென்றால், இது சிறாருக்கு எதிரான குற்றச்செயலாகும்.

E இத்தகைய பதிவுகள் விளம்பரப்படுத்தப்பட்டோ, பரிமாறப்பட்டோ, பரவலாகப் பகிரப்பட்டோ வருகின்றனவா?

F அத்தகைய பதிவுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றனவா?

G இத்தகைய பதிவுகள் தேடப்படுகின்றனவா?

H வளர்ந்த நியாயமான ஒரு நபர் ஆட்சேபிக்கும் வகையில், இணையத்தில் சிறுவர்கள் உறவுகளை வளர்க்கத் தூண்டப்படுகிறார்களா? (இளவர் வயப்படுத்துதல் (grooming)/சுரண்டலுக்கு இரையாக்கும் நடத்தை (predatory behavior)

I இப்பதிவுகளின் பகிர்வுதலை எளிமையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

மேற்கண்டவற்றில் a முதல் d வரையிலானவை உண்மையென்றால், 2000ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்படி இச்செயல் தண்டிக்கத்தக்க குற்றச்செயலாகும். e முதல் i வரையிலான குறிப்புகள், இக்குற்றச்செயல் மேற்கொள்ளப்பட்டதற்கான கூடுதல் விளக்கத்தைத் தரக்கூடியவை

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, பிரிவு 67B**

முதல்முறை குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 5 ஆண்டுகள் சிறைக்காவல் + 10 லட்ச ரூபாய் வரையிலான அபராத விதிப்பு

தொடர் குற்றச்செயலில் ஈடுபடுவோருக்கு: 7 ஆண்டுகள் சிறைக்காவல் + 7 லட்ச ரூபாய் வரை அபராத விதிப்பு

சிறார் அனைவருக்கும் இச்சட்டப்பிரிவு பொருந்தும்.

# பகுதி 2: ஆதரவு நாடும் முறை

## நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

### எல்லாவற்றையும் ஆவணப்படுத்தவும்:



திரைப்பதிவுகளை (screenshots) எடுத்துவைத்துக்கொள்ளவும். ஒவ்வொரு உரையாடலையும், அத்தகைய பதிவுகள் இருக்கக்கூடிய ஒவ்வொரு தளத்தையும், இந்நிகழ்வுகள் நிகழ்ந்த நாள் விவரங்களையும், இப்பதிவுகளைப் பகிரும் கணக்குகளையும் ஆவணப்படுத்தி வைத்துக்கொள்ளவும். இவை அனைத்தும் குற்றச்செயலில் ஈடுபட்டதற்கான தடய ஆதாரங்கள் என்பதை நினைவில் கொண்டு, இயன்ற அளவுக்கு விரிவாகவும் சிரத்தையுடனும் இவற்றை ஆவணப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

### புகார் தெரிவிக்கவும்:

- புகார் தெரிவிக்கும் வசதி (‘report’ option) உள்ளதா என்பதைக் கண்டறியவும். குறிப்பிட்ட அந்த வலைத்தளங்களிடம்/சமூக வலைத்தளங்களிடம் (எ. கா. முகநூல், இன்ஸ்டாகிராம்) நடவடிக்கை எடுக்கக் கோரிடவும், இத்தகைய பதிவுகளை நீக்கக் கோரிடவும் இது வழிசெய்யும். ‘தரமற்றவை/தகாதவை’ (’inappropriate’), கொடுமைக்கு ‘உள்ளாக்குதல்/துன்புறுத்துதல்’ (‘bullying/harassment’) ‘வன்முறை’ (‘violence’) போன்ற வகைப்பாடுகளின் கீழ் இத்தகைய பதிவுகளைப் புகார்செய்ய இயலும். இந்திய சட்டங்களின்படி சமூக வலைத்தளங்கள் தாங்கள் அளிக்கும் புகார்களை ஏற்று, அவற்றைப் பெற்ற 24 மணி நேரத்தில் அதற்குத் தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும். புகாரளிப்பதை உறுதிசெய்வதுடன், தங்களுடைய நம்பிக்கைக்குரிய நண்பர்களையும் உறவினர்களையும் கூட அப்பதிவுகளுக்கு எதிராகப் புகாரளிக்கச் சொல்லுங்கள். இதனிடையே, இப்பதிவுகளை வெளியிடும் கணக்குகள் தங்களை மேற்கொண்டு தொடர்புகொள்ள முடியாதவாறு அவற்றை முடக்கிவிடுங்கள் (block account).

- தங்கள் புகாரின் மீதான முடிவினைப் பற்றிய தகவலைக் கிடைக்கப்பெறுவீர்கள். அதில் தங்களுக்கு மனநிறைவு இல்லாவிட்டால், அவர்களின் முடிவினை மறுஆய்வு செய்ய விண்ணப்பிக்கும் வசதியும் உண்டு.

- மறுஆய்வுகளும் முடிவுகளும் கிடைக்கப்பெற்ற பிறகும், குறிப்பிட்ட அந்தச் சமூக வலைத்தளம் சரியான முடிவை எடுக்கவில்லை என்று தோன்றினால், அரசின் குறைதீர் மேல்முறையீட்டுக் குழுவிடம் (Grievance Appellate Committee) புகாரினைத் தாக்கல் செய்யலாம். இதைப் பின்வரும் இணைப்பில் செய்யலாம்: https://gac.gov.in/

- தங்களுடைய புகாரை அக்குழு எவ்வாறு ஆய்வுசெய்யும் என்பதைப் புரிந்துகொள்ள, கீழ்வரும் இணைப்பில் இருக்கக்கூடிய ‘அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்’ (Frequently Asked Questions–FAQ) பகுதியைப் பார்வையிடலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இத்தகைய பதிவுகளை என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த இறுதி முடிவுகளை அவர்களே எடுப்பார்கள். https://gac.gov.in/CMSData/FAQs?qs=+WcLOPiE4QBLhoNRiMqmqQ==

- அரசின் தேசிய இணையக் குற்றச்செயல் புகாரளித்தல் தளத்தில் (National Cyber Crime Reporting Portal) இத்தகைய நிகழ்வுகளைப் பற்றிய புகார்களைத் தெரிவிக்கலாம். இத்தளத்தின் இணைப்பு: https://cybercrime.gov.in/Webform/crmcondi.aspx.


**இவர்களுடைய உதவித் தொடர்பு எண் 1930 ஆகும்.**
**பெண்களுக்கான உதவித் தொடர்பு எண் 181.**

  - இத்தளத்தில் புகாரளிக்கும் முன்பு இவர்களுடைய FAQ பகுதியையும் பார்வையிடவும்: https://cybercrime.gov.in/Webform/FAQ.aspx

இவற்றை நேரத்தோடு செய்துவிட வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். குறிப்பாக, பின்னர் சைபர் காவல் நிலையத்திற்குச் சென்று முதல் தகவல் அறிக்கையைத் (FIR) தாக்கல் செய்ய நினைத்தால், மேற்கண்டவற்றைச் செய்துள்ளீர்களா என்பதை அவர்கள் விசாரிக்கக்கூடும். வலைத்தளங்களில் தங்களுடைய புகார் மீதான ஆய்வு நடக்கும் அதே சமயத்தில் இவற்றையும் நீங்கள் செய்யலாம்.

## முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யவும்

- காவல் துறையிடம் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய விரும்பினால், தங்களுக்கு அருகிலிருக்கும் காவல் நிலையத்திற்கோ, தங்கள் நகரத்தில் சைபர் குற்றவியல் சிறப்புக் கிளை இருந்தால் அந்த அலுவலகத்திற்கோ செல்லவும். கூகுள் மேப்ஸ் (Google maps) செயலியில் இவற்றின் அமைவிடங்கள் கிடைக்கும். ஒருவேளை நீங்கள் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டாம் என்று அவர்கள் சொன்னால், செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்துவிட்டீர்கள் என்பதையும், அவற்றை அதிகாரப்பூர்வமாகப் பதிவுசெய்ய விரும்புகிறீர்கள் என்பதையும் வலியுறுத்திக் கூறுங்கள்.




- BNSS பிரிவு 173ன் கீழ், குற்றம் எந்த அதிகாரப்பரப்பில் நிகழ்ந்திருந்தாலும், ஒவ்வொரு காவல்துறையினரும் குற்றம் தொடர்பான தகவல்/முறையீட்டை பதிவு செய்வது கட்டாயம். மேலும், இந்த முறையீட்டை ஆன்லைனிலும் அளிக்கலாம்.

- நீங்கள் வேறொரு காவல் நிலையத்திற்கும் செல்லலாம். தாங்கள் வசிக்கும் அதிகார வரம்பிற்குட்பட்ட காவல் நிலையமாக இருக்கவேண்டிய தேவையில்லை-எந்த நிலையமாக இருந்தாலும், அவர்கள் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்து பின்னர் உரிய காவல் நிலையத்திற்கு அதனை மாற்றம் செய்ய இயலும் (இதற்கு Zero FIR என்று பெயர்). இதில் பலனில்லை என்றால் தங்களுடைய மாவட்டக் குற்றவியல் நடுவரை (district magistrate) அணுகிப் புகாரளிக்கலாம்.

**சட்டப்படி புகாரை அளித்திட தங்களுக்கு உரிமை உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும்**

- முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்தல்: நடந்ததை இயன்ற அளவுக்குத் தெளிவாக எழுத முயற்சி செய்யவும். தொடர்புள்ள தகவல்களைச் சேர்க்கவும். நடந்ததை வாய்வழியாகச் சொன்னால் அதனை அதிகாரி எழுதிக்கொள்வார். அவர் எழுதியதை வாசித்தும் காட்டுவார்கள், அது சரியாக இருக்கிறதா என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். அவர்கள் வாசித்துக்காட்டவில்லை என்றால், வாசித்துக்காட்டுமாறு கேட்டுக்கொள்ளுங்கள். முத்திரையுடன் கூடிய முதல் தகவல் அறிக்கையின் (காவல்துறையின் ஏட்டு எண், DD எண் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்) நகலைப் பெற்றுக்கொள்ளுங்கள். முதல் தகவல் அறிக்கை எண்ணையும், தாக்கல் செய்த நாளையும், தாக்கல் செய்த காவல் நிலையத்தையும் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். இது முடிந்ததும் காவல்துறை தன் விசாரணையை மேற்கொள்வது அவசியம்.



# பிற்சேர்க்கை

**BNS- Bharatiya Nyaya Sanhita**
**BNSS- Bharatiya Nagarik Suraksha Sanhita**
**IT Act, 2000 - Information Technology Act, 2000**

**BNS, பிரிவு 356 (1-4)**
குற்ற அவதூறு (Criminal Defamation) தொடர்பானது: ஒருவர் (பேசுவதன் மூலம் அல்லது எழுதுவதன் மூலம்) மற்றொருவரின் நற்பெயருக்கு பங்கம் விளைவிக்க நினைத்தாலோ அல்லது ஒருவரின் செயல் மற்றொருவரின் பெயருக்கு பங்கம் ஏற்படும் என்பதை அறிந்தே அச்செயலை செய்தால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

**BNS, பிரிவு 74**
பெண்களை சுரண்டல் மற்றும் வற்புறுத்தல் (Exploitation and Extortion):
ஒரு பெண்ணின் மரியாதையை சேதப்படுத்தும் வகையில், அவர் மீது தாக்குதல் நடத்துவதோ அல்லது வலுக்கட்டாயமாக ஒரு செயலை செய்யத்தூண்டுவது உள்பட எந்த முறையிலும் அவர் மீது வன்முறையாக நடந்து கொள்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

**BNS, பிரிவு 75**
பாலியல் தொல்லைகளின் (Sexual Harassment) தன்மைகளை விவரித்து அவற்றிற்கான தண்டணைகளை விளக்குகிறது.

**BNS, பிரிவு 77**
ஒரு பெண்ணின் அந்தரங்களை செயல்பாடுகளை மறைமுகமாகவோ அல்லது அவரது அறிவிற்கு அப்பார்பட்டோ ஒருவர் புகைப்படம் எடுத்தாலோ மற்றும் அக்குறிப்பிட்ட பெண்ணின் அனுமதி இல்லாமல் அப்புகைப்படங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்தாலோ அவர்கள் தண்டணக்கு உட்படுவர்.

**BNS, பிரிவு 78**
பின்தொடர்தல் (Stalking) குற்றச்செயல்களை இப்பகுதி குறிப்பிடுகிறது. இந்திய தண்டணைச் சட்டம் 354D ஒருவரை தவறான கண்ணொணோட்டத்தில் பின்தொடர்வதை, குறிப்பாக மின்னனு தொடர்புச்சாதனங்கள் வழியாகப் பின்தொடர்வதை, அல்லது தனிநபரின் இணையச் செய்ல்பாடுகளை கண்காணிப்பதை குற்றமாக அறிவிக்க உருவாக்கப்பட்டது.

**BNS, பிரிவு 351(1)**
குற்றப்படுத்துவத்ற்கான மிரட்டல்கள் (Criminal Intimidation) தொடர்புடையது:
ஒருவரின் நற்பெயரை கலங்கப்படுத்தும் விதமாக அல்லது அவரின் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் விதமாகவோ மிரட்டுவதை இச்சட்டம் தொடர்புபடுத்துகிறது.

**BNS, பிரிவு 351(4)**
இச்சட்டம் அடையாளமற்ற தொடர்புகள் (anonymous communication) மூலமாக ஒருவரின் நற்பெயரை கலங்கப்படுத்துவதை அல்லது அவரின் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் விதமாகவோ மிரட்டுவதை இச்சட்டம் கையாளுகிறது.

**BNS, பிரிவு 79**
ஒரு பெண்ணின் மரியாதையை அவமதிக்கும் அல்லது தனியுரிமையை மீறும் எந்த செயலையும் தண்டிக்கிறது.

# பிற்சேர்க்கை

**பிரிவு 173(4) in Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023**
(4) ஒரு போலீஸ் நிலையத்தின் பொறுப்பாளர், BNS இன் பிரிவு 173(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை பதிவு செய்ய மறுத்தால், பாதிக்கப்பட்ட நபர் அந்த தகவலின் சாரத்தை எழுத்துப்பூர்வமாக அஞ்சல் வழியில் சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளர் (Superintendent of Police) க்கு அனுப்பலாம். அந்த தகவல் ஒரு குற்றச்செயல் என்று காவல் கண்காணிப்பாளர் உறுதிப்படுத்தினால், அவர் நேரடியாக விசாரணை நடத்தலாம் அல்லது கீழமை காவலர்களில் ஒருவரை விசாரணை செய்ய உத்தரவிடலாம். அப்படி நடக்காத பட்சத்தில், பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தில் (Magistrate) முறையிடலாம்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 66C**
அடையாளத் திருட்டிற்கான தண்டனை குறித்தது. தீங்கு விளைவிக்கும் நோக்கிலோ, அல்லது ஏமாற்றுச் செயலில் ஈடுபடும் நோக்கிலோ ஒருவரின் தனிப்பட்ட அடையாளத்தை நேர்மையற்ற முறையில் பயன்படுத்தும் குற்றச்செயலைப் பற்றியது இச்சட்டப்பிரிவு.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 66D**
தொலைதொடர்புக் கருவிகளின் மூலமாகவோ, கணினியின் மூலமாகவோ, வேறொருவரைப் போல நடித்து ஏமாற்றுச் செயலில் ஈடுபடுவோர் இச்சட்டப்பிரிவின்படி தண்டிக்கப்படுவார்கள்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 66E**
ஒருவரின் அந்தரங்க இடங்களின் படங்களை அவர்தம் ஒப்புதலின்றி இணையத்தில் பகிர்வோர், உடல்ரீதியான தனியுரிமையை மீறும் காரணத்தால் இச்சட்டப்பிரிவின்படி தண்டிக்கப்படுவார்கள்.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 67**
எந்தவொரு மின்னணு வடிவிலும் ஆபாசத் தன்மை வாய்ந்த பதிவுகளை வெளியிடும் செயல்களையும், பரப்பும் செயல்களையும் இச்சட்டப்பிரிவு தண்டிக்கிறது.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பிரிவு 67A**
பாலியல் ரீதியாக வெளிப்படையான பதிவுகளை மின்னணு வடிவில் வெளியிடும் செயல்களையும், பரப்பும் செயல்களையும் இச்சட்டப்பிரிவு தண்டிக்கிறது.

67 மற்றும் 67A ஆகிய உட்பிரிவுகளைத் தவறாகப் பயன்படுத்துதல்:
இவ்விரு உட்பிரிவுகளும் பெரும் தண்டனைகளை விதிக்கின்ற காரணத்தாலும், ‘ஆபாசத்தன்மை’, ‘பாலியல் ரீதியாக வெளிப்படை’ போன்ற சொற்கள் தெளிவான பொருளைக் கொண்டிராத காரணத்தாலும், அவை முறையில்லாத கைதுகளுக்கு வழிவகுத்துள்ளன. தகாத பதிவுகளைப் பரப்புதலையும் வெளியிடலையும் இச்சட்டப்பிரிவுகள் தண்டிக்கின்றன. ஒப்புதல் பெறப்பட்ட செயல்கள், ஒப்புதலின்றி செய்யப்பட்ட செயல்கள் ஆகிய இரண்டையும் இச்சட்டப்பிரிவு பிரித்துப்பார்ப்பதில்லை, இவ்விரண்டு குற்றச்செயல்களுக்கும் இச்சட்டப்பிரிவுகள் பொருந்தும்.

சிறார்களைப் பாலியல் ரீதியாக வெளிப்படையான செயல்களில் சித்தரிக்கும் பதிவுகளை வெளியிடுவதையும் பரப்புதலையும் தண்டித்தல் பற்றியது இச்சட்டப்பிரிவு.




sflc.in unesco